முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை
**அசல் வழக்கு எண்.90/2021**
(CNR.No. TNTS08-000114-2021)

கிருஷ்ணம்மாள் ...வாதி

/எதிர்/

1. இராமர்தேவர்
2. S.காளிராஜ்
3. தனலட்சுமி
4. கார்த்திஸ்வரி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 13.03.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.தேன்மொழி அவர்கள் ஆஜராகியும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் இருதரப்பு சாட்சியம், வாதி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாத உரைகள் ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வாதியால் இவ்வழக்கானது, தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யும்படிக்கும், அதனை தொடர்ந்து வாதி தபசில் சொத்தை அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:40:19 +0530

மேற்படியார்களின் வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர ஏவுகட்டளை பிறப்பிக்கும்படிக்கும், 1ம் பிரதிவாதி பெயரிலான 23.04.1993 தேதிய கிரைய ஆவண எண்.67/1993 மற்றும் 2ம் பிரதிவாதியால் 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட 22.10.2012 தேதிய கிரைய ஆவண எண்.3525/2012 செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என (Null and void) விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u> :

தபசில் கண்ட சொத்தும், அதனைச் சேர்ந்த சொத்தும் ஆதியில் கணபதிதேவர், ஆவுடையப்பத்தேவர், காளிமுத்துதேவர் ஆகியோர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மேற்படியார்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதில் தபசில் சொத்து கணபதி தேவருக்கு கிடைக்கப்பெற்று, மேற்படியாரின் இறப்பிற்குப் பின்பு, அவரது மகனான மாரியப்பத்தேவர் என்பவர் லட்சுமியம்மாள் என்பவருக்கு கடந்த 10.09.1968 தேதியில் கிரைய ஆவணம் மூலம் மால்கள் குறிப்பிட்டு பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், அதன் பின்பு தபசில் சொத்தை லட்சுமியம்மாள் என்பவர் சர்வசுதந்திர பாத்தியமாய் அனுபவம் செய்து வந்தார் என்றும், லட்சுமியம்மாள் என்பவர் வாதியின் சகோதரி என்றும், மேற்படி லட்சுமியம்மாளுக்கும் மேற்படியாரின் கணவர் வீரையா தேவருக்கும் குழந்தை பாக்கியம் எதுவும் இல்லாததால் வாதியை 03.05.1993 தேதியில் தத்து புதல்வியாக பதிவு செய்து ஆவணம் பிறப்புவித்துக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி லட்சுமியம்மாள் வாதியை தனது அடுத்த வாரிசாக விட்டுவிட்டு கடந்த 2005ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றும், தபசில் சொத்திற்கு வாதியின் முன்பாத்தியஸ்தர் லட்சுமியம்மாள் பெயரில் பட்டா பாஸ்புக் வழங்கப்பட்டுள்ளது என்றும், கூட்டு பட்டா பாஸ்புக் எண்.2282 என்றும், ஆவுடையப்பத்தேவர் என்பவர் 1ம் பிரதிவாதியின் சித்தப்பா என்றும், மேற்படியார்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.04 18:40:25 +0530

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு வாரிசு எதுவும் இன்றி காலமாகிவிட்டார் என்றும், அதுபோல காளிமுத்து தேவர் என்பவர் திருமணம் எதுவும் செய்யாமல் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்றும், பிரதிவாதிகள் தபசில் சொத்திற்கு முற்றிலும் அன்னியர் ஆவார்கள் என்றும், தபசில் சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும், பிரதிவாதிகள் அனைவரும் நெருங்கிய உறவினர்கள் என்றும், 1ம் பிரதிவாதி கேரளா மாநிலம் எஸ்டேட்டில் குடியிருந்து வருகிறார் என்றும், இந்நிலையில் கடந்த 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் பிரதிவாதிகள், வாதி தபசில் சொத்தை அனுபவம் செய்துவருவதை இடையூறு செய்தார்கள் என்றும், அதன் பின்பு தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும் என்றும், 3, 4 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி மூலம் வில்லங்கப் பாராதீனங்கள் செய்துவிட்டதாகவும் வாதியிடம் கூறினார்கள் என்றும், அதன் பின்பு வாதி நகல் எடுத்துப் பார்த்ததில் 1ம் பிரதிவாதி தபசில் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத வீரையாத்தேவர் குமாரர் ராமசாமியிடமிருந்து மோசடியாக 75 செண்டைப் பொறுத்து கடந்த 23.04.1993 தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றும், ராமசாமிக்கும் தபசில் சொத்துக்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும், மேற்படியார் தபசில் சொத்தை கிரையம் கொடுக்க எவ்வித உரிமையும் கிடையாது என்றும், மேற்படி கிரைய ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பவர் ஏஜெண்ட் நிலைமையில் தபசில் சொத்துக்களை 3, 4 பிரதிவாதிகளுக்கு கடந்த 22.10.2012 தேதியில் மோசடியாக கிரைய ஆவணம் ஒன்றை பிறப்புவித்துக்கொடுத்துள்ளார்கள் என்றும், தபசில் சொத்துக்களை மேற்படியார் கிரையம் கொடுக்க எவ்வித உரிமையும் கிடையாது என்றும், மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், வீரையாத்தேவர் குமாரர் இராமசாமி என்பவர் தனது மனைவி கோமதி என்பவரை தனது அடுத்த வாரிசாக விட்டுவிட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்றும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:40:31 +0530

கோமதியம்மாள் என்பவர் குழந்தை பாக்கியம் எதுவும் இல்லாமல் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு வாரிசுகள் எதுவுமின்றி காலமாகிவிட்டார் என்றும், மேலும் பிரதிவாதிகள் தபசில் சொத்திற்கு மோசடியாகப் பட்டா மாற்றம் செய்துள்ளார்கள் என்றும், பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செய்கையை இந்நீதிமன்றத்தின் தடையாணை உத்தரவின் மூலமே தடுத்த நிறுத்த முடியும் என்றும், இல்லாத பட்சத்தில் வாதிக்கு அளவிடமுடியாத அளவில் கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருக்கிறது என்றும், எனவே, தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யும்படிக்கும், அதனை தொடர்ந்து வாதி தபசில் சொத்தை அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, மேற்படியார்களின் வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர ஏவுகட்டளை பிறப்பிக்கும்படிக்கும், 1ம் பிரதிவாதி பெயரிலான 23.04.1993 தேதிய கிரைய ஆவண எண்.67/1993 மற்றும் 2ம் பிரதிவாதியால் 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட 22.10.2012 தேதிய கிரைய ஆவண எண்.3525/2012 செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என (Null and void) விளம்புகை செய்யக்கோரியும் வாதியால் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

வாதியின் பிராது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை என்றும், பிராது தபசில் கண்ட சொத்துக்களும், அதோடு சேர்ந்த வேறு சொத்துக்களும் ஆதியில் வீரையாத்தேவர் குமாரர் ராமசாமி என்பவருக்குப் பூர்வீகமாகப் பாத்தியப்பட்டு மேற்படியார் ஆண்டு அனுபவம் செய்துவந்து, மேற்படியார் 1ம் பிரதிவாதியிடம் சரியான பிரதிபிரயோஜனத்தைப் பெற்றுக்கொண்டு கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.67/1993ன் படி கடந்த 23.04.1993 தேதியில் கிரைய ஆவணம் மூலம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:40:37 +0530

பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், பின்பு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு பிராது தபசில் கண்ட சொத்துக்களையும், அதோடு சேர்ந்த வேறு சொத்துக்களையும் பொறுத்து கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.201/2009 ன் படி கடந்த 09.11.2009 தேதியில் பொது அதிகார ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக்கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி 2ம் பிரதிவாதி காளிராஜ் என்பவர் 3, 4 பிரதிவாதிகளிடம் சரியான பிரதிபிரயோஜனத்தைப் பெற்றுக்கொண்டு கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3525/2012 ன் படி கடந்த 22.10.2012 தேதியில் கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், அதன் பின்பு பட்டா மாற்றம் செய்து 3, 4 பிரதிவாதிகள் பெயரில் 3399 என பட்டா ஏற்பட்டும் தீர்வை முதலானவை செலுத்தி ஆண்டு அனுபவம் செய்துவருகிறார்கள் என்றும், இதன் தபசில் கண்ட சொத்துக்கும் வாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், இதன் தபசில் கண்ட சொத்துக்கு வாதி முற்றிலும் அந்நியர் என்றும், இந்நிலையில் இதன் தபசில் கண்ட சொத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்து பயிர் செய்ய கடந்த 18.09.2020 தேதியில் முயற்சி செய்துவந்தார் என்றும், இது சம்பந்தமாக 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாரான 2ம் பிரதிவாதி காளிராஜ் என்பவர் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து மேற்படி புகாரின் பேரில் காவல்நிலைய அதிகாரிகள் 3, 4 பிரதிவாதிகளை வட்டாட்சியர் அலுவலகம் மூலம் அத்துமால் அளந்து பார்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார் என்றும், மேலும் புகார் மனு சம்பந்தமாக புகார் மனு ஏற்பு ரசீது எண். 881/2020 என ரசீது வழங்கியுள்ளனர் என்றும், அதன்பின்பு 3, 4 பிரதிவாதிகள் திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பிராது தபசில் சொத்தை நான்கு மால் அளவை செய்யக்கோரி கடந்த 24.09.2020 தேதியில் மனு கொடுத்து செல்லான் கட்டியதில் மேற்படி திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலக நில அளவை பிரிவு நில அளவையர் 3, 4 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட பிராது தபசில் கண்ட சொத்துக்களை நான்கு

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.04 18:40:43 +0530

மால் அளந்து கல் ஊன்றி சென்றார்கள் என்றும், அதன்பின்பும் 3, 4 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட பிராது தபசில் கண்ட சொத்துக்களை அமைதியான முறையில் ஆண்டு அனுபவம் செய்து வருவதை வாதி இடையூறு செய்து வந்தார் என்றும், இதனால் மீண்டும் 3ம் பிரதிவாதி கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் கடந்த 27.02.2021 தேதியில் புகார் மனு கொடுத்து மேற்படி புகாரின் பேரில் மேற்படி காவல்நிலைய அதிகாரிகள் வாதியை எச்சரித்து அனுப்பினார்கள் என்றும், இந்தநிலையில் 3, 4 பிரதிவாதிகள் பெண்பாலாக இருப்பதால், 3, 4 பிரதிவாதிகள் பிராது தபசில் கண்ட சொத்தில் பருத்தி பயிரிட்டு அனுபவம் செய்துவருவதை தொடர்ந்து இடையூறு செய்ய கடந்த 30.11.2021ம் தேதி முதல் தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்கள் என்றும், மேலும் வாதி 3, 4 பிரதிவாதிகளை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதுடன் கொலை மிரட்டல் செய்து வருகிறார்கள் என்றும், இது சம்பந்தமாக 3, 4 பிரதிவாதிகள், வாதி மீதும் அவருடைய கணவர் மீதும் சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 277/2021 என வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கிற்கு முன்பே வாதி, பிரதிவாதிகள் மீது வழக்கைத் தாக்கல் செய்திருந்ததாலும், வழக்கில் 45 சென்டைப் பொறுத்து மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், 3, 4 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.277/2021 வழக்கை கடந்த 28.07.2022ம் தேதி வாபஸ் பெற்றுக்கொண்டார் என்றும், இந்த வழக்கின் வாதிக்கும் லட்சுமியம்மாள் என்பவருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், எனவே, வாதி வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.04 18:40:50 +0530

அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக **28.11.2024 ம்** தேதியில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன.

1. பிராது தபசில் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டதா?
2. பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. 23.04.1993 மற்றும் 22.10.2012 தேதியிட்ட கிரைய ஆவணங்கள் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?

4) இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வாதி தரப்பில், வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில், 3ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6) எழுவினா.1 :</u>**

- பிராது தபசில் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டதா?

7) இவ்வழக்கில் வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், தபசில் சொத்து லட்சுமியம்மாளுக்கு 10.09.1968 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்தது என்றும், மேற்படி லட்சுமியம்மாளுக்கும் மேற்படியாரின் கணவர் வீரையா தேவருக்கும் குழந்தை பாக்கியம் எதுவும் இல்லாததால் வாதியை 03.05.1993 தேதியில் தத்து

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.04 18:40:57 +0530

புதல்வியாக பதிவு செய்து ஆவணம் பிறப்புவித்துக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி லட்சுமியம்மாள் வாதியை தனது அடுத்த வாரிசாக விட்டுவிட்டு கடந்த 2005ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றும், அதன்பிறகு தபசில் சொத்து வாதிக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டு வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும், கடந்த 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் பிரதிவாதிகள், வாதி தபசில் சொத்தை அனுபவம் செய்துவருவதை இடையூறு செய்தார்கள் என்றும், 1ம் பிரதிவாதி தபசில் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத வீரையாத்தேவர் குமாரர் ராமசாமியிடமிருந்து மோசடியாக 75 செண்டைப் பொறுத்து கடந்த 23.04.1993 தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றும், ராமசாமிக்கும் தபசில் சொத்துக்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும், மேற்படியார் தபசில் சொத்தை கிரையம் கொடுக்க எவ்வித உரிமையும் கிடையாது என்றும், மேற்படி கிரைய ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், வாதிக்கு வழக்கில் கோரிய பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது என்றும் வாதிட்டார்.

8) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பிராது தபசில் கண்ட சொத்துக்களும், அதோடு சேர்ந்த வேறு சொத்துக்களும் ஆதியில் வீரையாத்தேவர் குமாரர் ராமசாமி என்பவருக்குப் பூர்வீகமாகப் பாத்தியப்பட்டு மேற்படியார் ஆண்டு அனுபவம் செய்துவந்து, மேற்படியார் 1ம் பிரதிவாதி ராமர்தேவர் என்பவரிடம் சரியான பிரதிபிரயோஜனத்தைப் பெற்றுக்கொண்டு கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.67/1993ன் படி கடந்த 23.04.1993 தேதியில் கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், 1வது பிரதிவாதியிடம் பொது அதிகார ஆவணம் பெற்ற 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனார் 2ம் பிரதிவாதி காளிராஜ் என்பவர் 3, 4 பிரதிவாதிகளிடம் சரியான பிரதிபிரயோஜனத்தைப் பெற்றுக்கொண்டு கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3525/2012ன் படி கடந்த 22.10.2012 தேதியில் கிரைய ஆவணம் மூலம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:41:04 +0530

பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், அதன் பின்பு பிராது தபசில் கண்ட சொத்துக்களையும், அதோடு சேர்ந்த வேறு சொத்துக்களையும் வாதிகளே பட்டா மாற்றம் செய்து 3, 4 பிரதிவாதிகள் பெயரில் 3399 என பட்டா ஏற்பட்டும் தீர்வை முதலானவை செலுத்தி ஆண்டு அனுபவம் செய்துவருகிறார்கள் என்றும், லட்சுமியம்மாளுக்கும், வாதிக்கும் தபசில் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

9) இந்நிலையில், தபசில் சொத்து காலம்சென்ற லட்சுமியம்மாளுக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என்பதையும், வாதிக்கு தத்து ஆவணத்தின் அடிப்படையில் தபசில் சொத்தில் லட்சுமியம்மாளின் வாரிசு என்ற அடிப்படையில் உரிமைமூலம் ஏற்பட்டது என்பதையும், தபசில் சொத்து வாதியின் சட்டப்பூர்வமான அனுபவத்தில் உள்ளது என்பதையும் நிரூபிக்கும் சுமை இவ்வழக்கு வாதியையே சார்ந்தது ஆகும்.

10) இவ்வழக்கின் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 ஆன 10.01.1968 தேதியிட்ட மாரியப்பத்தேவர் என்பவர் லட்சுமியம்மாளுக்கு தபசில் சொத்து குறித்து பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.3 ஆன லட்சுமியம்மாள் பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகம் ஆகியவற்றின் பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கு தபசில் சொத்து ஆதியில் லட்சுமியம்மாளுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டு, அவரது அனுபவத்தில் இருந்து வந்துள்ளது என்பதை வாதி இவ்வழக்கில் நிரூபணம் செய்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

11) இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் தபசில் கண்ட சொத்துக்கள் வீரையாத் தேவர் மகன் ராமசாமிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என கட்சி எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இவ்வழக்கு வாதி தரப்பில்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.04 18:41:11 +0530

தாக்கல் செய்யப்பட்ட 23.04.1993 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தரான வீரையாத் தேவர் மகன் ராமசாமி என்பவர் 1ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.4–னை பார்வையிடும்போது, அதில், ராமசாமியால் **"எனக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு என் பங்குக்கு கிடைத்து"** என குறிப்பிடப்பட்டுள்ளது.

12) ஆனால், இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.4 ல் கண்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தரான வீரையாத் தேவர் மகன் ராமசாமி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்வதற்கான முந்தைய கிரைய ஆவணம், பட்டா ஆகிய எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

13) இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தரான வீரையாத் தேவர் மகன் ராமசாமிக்கு உரிமைமூலம் இருந்தது என்பதை நிரூபணம் செய்யாத நிலையில், மேற்படி ராமசாமியால் 1ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின்படி தபசில் சொத்தில் 1 வது பிரதிவாதிக்கு செல்லத்தக்க உரிமை மூலமானது ஏற்படாது.

14) மேலும், இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த 3 வது பிரதிவாதியான பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> “......வாதி கிருஷ்ணம்மாள் மேற்படி ஊரில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். வாதி கிருஷ்ணம்மாளை எனக்கு தெரியும் என்றால் தெரியும். வாதி கிருஷ்ணம்மாள் தாவா சொத்தில் விவசாயம் செய்துவந்தார் நான் அதை பார்த்துள்ளேன் என்றால் சரிதான் நான் அதை பார்த்துள்ளேன் என சாட்சியம் அளித்துவிட்டு பின்னர் மாற்றி நான்தான் அனுபவிக்கிறேன் என சொல்கிறார்....”
>
> “.....இந்த வழக்கிற்கு பிறகு நான் வாதியை சந்தித்து வழக்குச் சொத்திற்கான பணத்தை கொடுத்துவிடுகிறேன் இடத்தை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:41:17 +0530

காலிசெய்யும்படி வாதியிடம் சொன்னேனா என்றால் ஆமாம் முதலில் சொன்னேன்........”

என சாட்சியம் அளித்துள்ளார்.

15) மேற்கண்ட பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து, 3வது பிரதிவாதியே தபசில் சொத்தின் அனுபவம் வாதியிடம் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்திருப்பதிலிருந்து, தபசில் சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருப்பதாக எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் தெரிவித்திருப்பது உண்மையல்ல என்பதையும், வாதியே தபசில் சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

16) மேலும், இவ்வழக்கு வாதி தரப்பில் வா.சா.ஆ.6 ஆக தபசில் சொத்திற்கு 3வது பிரதிவாதி மற்றும் 4வது பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா – கணினி நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் முன்பாத்தியஸ்தரான ராமசாமியின் தபசில் சொத்தின் மீதான உரிமைமூலமானது நிரூபிக்கப்படாத நிலையில் மேற்கண்ட வா.சா.ஆ.6 பட்டாவை மட்டும் அடிப்படையாகக் கொண்டும், தபசில் சொத்தின் மீது பிரதிவாதிகளுக்கு உரிமை இருப்பதாக ஏற்றுக்கொள்ள இயலாது.

17) மேலும், இவ்வழக்கு வாதி தரப்பில் 1ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தரான ராமசாமி என்பவரை இவ்வழக்கில் கட்சி சேர்க்காதது குறித்து மேற்படி ராமசாமி தனது மனைவி கோமதி என்பவரை தனது அடுத்த வாரிசாக விட்டுவிட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்றும், கோமதியம்மாள் என்பவர் குழந்தை பாக்கியம் எதுவும் இல்லாமல் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு வாரிசுகள் எதுவுமின்றி காலமாகிவிட்டார் என்றும் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதி உண்மையல்ல என்பதை நிரூபணம் செய்ய

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:41:23 +0530

பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

18) மேலும், இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்ட, 2 வது பிரதிவாதியால் கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் வாதிக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகார் மனு, புகார் மனு ரசீது மற்றும் 3, 4 பிரதிவாதிகளால் தபசில் சொத்தை அளக்க கொடுக்கப்பட்டதாக கூறப்படும் மனு ஆகிய எவ்வித ஆவணங்களும் பிரதிவாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

19) மேலும், இவ்வழக்கின் வாதி தரப்பில் வா.சா.ஆ.2 ஆக லட்சுமியம்மாள் வாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த தத்து ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 தத்து ஆவணம் உண்மையானது அல்ல என்பதை நிரூபணம் செய்யவும், மேற்படி ஆவணத்தை ரத்து செய்யவும், செல்லத்தக்கது அல்ல என விளம்புகை செய்யவும் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மேற்படி வா.சா.ஆ.2 தத்து ஆவணத்திற்கு எதிராக எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

20) மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில்

> "........இது முதல் எனது தத்துப் புதல்வியை என் சொந்தப்புதல்விக்கு ஏற்பட்டது போல இந்து சட்டப்படி ஏற்பட்ட சகல உரிமைகளும் கடமைகளும் உண்டு. என்னுடைய சகல ஸ்தாவர சயகம சொத்துக்கள் யாவுக்கும் ஏக வாரிசாக மேற்படி எனது தத்து புதல்வி மேற்படி செல்லம்மாள் என்ற கிருஷ்ணம்மாளை சுவீகாரமாக எடுத்து சொந்த மகளாக பாவித்துள்ளேன். நான் உயிருடன் உள்ளவரை எனக்கு வேண்டிய கடமைகளை செய்யவும் என் ஆயுளுக்குப் பின்னால் ஆற்ற வேண்டிய கடமைகளையும் சமயமுறைப்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:41:37 +0530

ஏற்பட்ட சகல சடங்குகள் முறைப்படி செய்யவும் எனது தத்து புதல்வியான மேற்படி எனது மகள் ஆற்ற கடமைப்பட்டவள். இப்படிக்கு நான் சுயஅறிவோடும் நன்கு சிந்தித்து பிறர் தூண்டுதல் எதுவுமின்றி மனப்பூர்வமாக இந்த தத்து ஆவணத்தை பிறப்பித்துக் கொள்கிறேன்......."

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

21) மேற்படி ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து இவ்வழக்கு வாதியே காலம்சென்ற லட்சுமியம்மாளின் தத்து மகள் என்பதையும், வாதிக்கு தபசில் சொத்து வாரிசுப்படி பாத்தியப்பட்டது என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

22) மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கு வாதி தரப்பில் வழக்கு தபசில் சொத்து ஆதியில் வா.சா.ஆ.1 ன்படி லட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதையும், வா.சா.ஆ.2 ன் படி மேற்படி லட்சுமியம்மாளின் தத்து மகளான வாதிக்கு வாரிசுப்படி தபசில் சொத்து தனித்து பாத்தியப்பட்டு வாதியின் சட்டப்படியான அனுபவத்தில் உள்ளது என்பதையும், வாதி இவ்வழக்கில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக நிரூபணம் செய்துள்ள காரணத்தினால், தபசில் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என **எழுவினா.1**–ற்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் தீர்வுகாணப்படுகிறது.

**23) <u>எழுவினா.2</u>:**

- பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

மேற்கண்ட எழுவினா.1 ற்கான பரிசீலனையில் இருந்து, வாதிக்கு தபசில் சொத்து தனித்து பாத்தியப்பட்டு வாதியின் சட்டப்படியான அனுபவத்தில் உள்ளது என இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டிருப்பதால், வாதிக்கு வழக்கில்

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:41:52 +0530

கோரியவாறு தபசில் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது என இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு **எழுவினா.2**–ற்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**24) <u>எழுவினா.3</u>:–**

- 23.04.1993 மற்றும் 22.10.2012 தேதியிட்ட கிரைய ஆவணங்கள் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

25) வாதியால் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி பெயரிலான 23.04.1993 தேதிய கிரைய ஆவண எண்.67/1993 மற்றும் 2ம் பிரதிவாதியால் 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட 22.10.2012 தேதிய கிரைய ஆவண எண்.3525/2012 ஆகியவை செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என (Null and void) விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது.

26) மேற்படி கிரைய ஆவணங்கள் வாதி தரப்பில் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பார்வையிடும்போது அதில், இவ்வழக்கு தபசில் சொத்து உள்ளடங்க இதர சொத்துக்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 கிரைய ஆவணங்கள் குறித்து முழுமையாக செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என (Null and void) விளம்புகை பரிகாரம் பெற வாதி தகுதி உடையவர் அல்ல.

27) எழுவினா.1–ற்கான பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றத்தால் தபசில் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என முடிவு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:42:00 +0530

காணப்பட்டிருப்பதால், வா.சா.ஆ.4 ஆன 23.04.1993 தேதியிட்ட ராமசாமி என்பவர் 1ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.5 ஆன 22.10.2012 தேதியிட்ட 2ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் ஆகியவை இவ்வழக்கு தபசில் சொத்துக்களை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு **எழுவினா.3** வாதிக்கு ஆதரவாக பகுதியாக அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

28) <u>**எழுவினா.4** :–</u>

- வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?

மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து, இவ்வழக்கு தரப்பினர்களால் எடுக்கப்பட்டுள்ள கட்சி மற்றும் மேலே தீர்மானிக்கப்பட்டுள்ள வழக்கெழுவினாக்கள்.1 முதல் 3–ஐ கருத்தில் கொண்டு தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், வாதியின் வழக்கு செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் **எழுவினா.4** ற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**29) இறுதியாக,**

இவ்வழக்கானது பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

i) வழக்கு தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டதென பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்யப்பட்டும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:42:09 +0530

ii) தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறுகளும் செய்யக்கூடாதென மேற்படியார்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டும்,

iii) 23.04.1993 தேதியிட்ட ராமசாமி என்பவர் 1ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்தை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லாநிலையது (Null and Void) என விளம்புகை செய்யப்பட்டும்,

iv) 22.10.2012 தேதியிட்ட 2ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்தை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லாநிலையது (Null and Void) என விளம்புகை செய்யப்பட்டும்,

v) வாதியின் வழக்கு செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 04 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:42:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. வாதி தரப்பு சாட்சிகள் :-**

1. வா.சா.1 திருமதி.கிருஷ்ணம்மாள் (வாதி)

**2. வாதி தரப்பு சான்றவாணங்கள் :-**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.01.1968 | மாரியப்பத்தேவர் என்பவர் லட்சுமியம்மாளுக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் – அசல் |
| வா.சா.ஆ.2 | 03.05.1993 | லட்சுமியம்மாள் வாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த தத்து ஆவணம் – அசல் |
| வா.சா.ஆ.3 | -- | லட்சுமியம்மாள் பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகம் – அசல் |
| வா.சா.ஆ.4 | 23.04.1993 | ராமசாமி என்பவர் 1ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் – சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.5 | 22.10.2012 | 2ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் – சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.6 | -- | தபசில் சொத்திற்கு 3வது பிரதிவாதி மற்றும் 4வது பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா – கணினி நகல் |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :-**

1. பி.வா.சா.1 – திருமதி.தனலட்சுமி (3ம் பிரதிவாதி)

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றவாணங்கள் :-** இல்லை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.04 18:42:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ.நீ., சங்கரன்கோவில்

அசல் வழக்கு எண்.90/2021

**தீர்ப்புரை** (Draft / Fair)

நாள் : 04.06.2026